உள்ளடக்கம்

1.0	நோக்கு	1
2.0	செயற்பணி	1
3.0	நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்2014 ஆம் ஆண்டு இல33	1
4.0	பிரதான நோக்கங்கள்	1
5.0	நிறுவனக் கட்டமைப்பு	2
	பிரிவுகளின் செயற்பாடுகள்	4
6.1	கைத்தொழில் சேவைகள் பிரிவு	6
6.2	அபிவிருத்திப் பிரிவு	9
6.3	மின் எந்திரவியல் சேவைப் பிரிவு	15
6.4	பயிற்சிப் பிரிவு	25
6.5	மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவு	35
6.6	நிதிப் பிரிவு	38

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)

1.0 நோக்கு

"உலக தரங்களுக்கு அமைவாக இலங்கையில் நம்பகமான மற்றும் திறமையான நிர்மாணக் கைத்தொழிலை உருவாக்குதல்"

2.0 செயற்பணி

"ஒரு தேசிய நிர்மாண கொள்கை அடிப்படையில் தொழில்முறையான சேவைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடுகள், திறன் விருத்தி, அபிவிருத்தி மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலையான தேசிய அபிவிருத்திக்காக நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு முலோபாய தலைமைத்துவத்தை வழங்குதல்."

3.02014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் "நீண்ட தலைப்பு" நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் நோக்கங்களையும் பின்வருமாறு பிரதிபலிக்கிறன:-

"இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் வளர்ச்சியை நேக்காகக் கொண்டு பதிவு நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றை தரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாண வேலைகளுக்கான தேசிய ஆலோசனைக் குழுவை நிறுவுவதற்கும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியம் என்பவற்றை நிறுவுவதற்கும் தொழில் சார் நிபுணர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்ததாரர்கள், மற்றும் கைவினைஞர்களின் முன்னேற்றம் மற்றும் நன்மைக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான பிணக்குகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் இலங்கையில் நிர்மாணக்கைத்தொழில், பொதுமக்கள் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்"

4.0பிரதான நோக்கங்கள்

CIDA வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு

- கௌரவ அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய நிர்மாண தேசிய கொள்கையை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்குதாரர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.
- அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் நிர்மாணக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களின் பதிவை புதுப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்.
- ஆற்றல் மிக்க கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் வளர்ச்சிக்கு எந்த விடயங்களில் ஆராய்ச்சி, பிரச்சாரம்,ஆய்வுப் பணிகள் மற்றும் வெளியீடுகள் தேவைப்படுகின்றனவோ அவற்றை ஊக்குவித்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில்சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;
- நிர்மாணக்கைத்தொழில் தொடர்பாக அதிகாரசபையினால் இயற்றியுள்ள நடவடிக்கை முறைகள், விதிகள், செயல்முறைகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை செயல்படுத்தல்.

5.0 தாபனம்

அறிமுகம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) பதில் நிறுவனமாக 2014ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. முகாமைத்துவ குழுவின் தவிசாளரினால் இந்த நிறுவனம் தலைமை வகிக்கப்படுகின்றது.

முகாமைத்துவக் குழு

	பெயர் மற்றும் முகவரி	பதவி	நியமிக்கப்பட்ட திகதி
1	கலாநிதி. எம்.எம்.ஈ. ஜோகிம் 27/6, பீடர்சன் ஒழுங்கை வெள்ளவத்தை கொழும்பு 06	தவிசாளர்	2016.09.12
2	திரு ஜி. வன்னிநாயக்க சட்ட வழக்கறிஞர் 17/3, பிரிவென வீதி பொரலஸ்கமுவ	உறுப்பினர்	2015-03-04
3	திரு பி.பி.எஸ்.சி. நோனிஸ் பணிப்பாளர் - பொது நிதித் திணைக்களம் கொழும்பு 01	உறுப்பினர்	2015.02.27
4	பேராசிரியர் (திருமதி) சித்ரா வெடிக்கார இல 31, ஆல்பர்ட் பிளேஸ், தெஹிவளை	உறுப்பினர்	2015.02.09
5	பட்டய கணிய அளவீட்டாளர் ஹேமந்த அபோன்சு இலக்கம் 45 / பி, பாடசாலை ஒழுங்கை, நாவல	உறுப்பினர்	2015-02-09
6	பொறி. எல்.டபிள்யூ. பாலித பணிப்பாளர் (நகர் குடியிருப்பு) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, “செத்சிறிபாய“ பத்தரமுல்ல.	உறுப்பினர்	2015.02.16
7	கலாநிதி கலீல் காசிம் இல 16, அனுலா வீதி, கொழும்பு 06.	உறுப்பினர்	2015.02.16
8	மேஜர் ரஞ்சித் குணதிலக்க நிர்வாகப் பணிப்பாளர் சன்கென் லங்கா (பிரைவேற்) லிமிடெட் # 295, மாதம்பிட்டி வீதி, கொழும்பு 14.	உறுப்பினர்	2015.02.16
9	பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ. ஜயவர்த்தன துணை வேந்தர் மொரட்டுவ பல்கலைக்கழகம் கடுபெத்த, மொரட்டுவ.	உறுப்பினர்	2015.03.09

10	பொறி. ஜே.கே.லங்காதிலக்க கூட்டிணைக்கப்பட்ட பொறியாளர்கள் நிறுவனம் இலங்கை. 27 பீ, உடுமுல்லை வீதி பத்தரமுல்ல. 14, ஷேடி கல்லறை அவென்யூ கொழும்பு 08.	உறுப்பினர்	2015.11.20
11	திரு ருக்ஷான் ஜயவர்தன இல 55, புளவர் வீதி கொழும்பு 07.	உறுப்பினர்	2015.02.16
12	திரு ஏ.பி.கலகொட இலங்கை தேசிய நிர்மாண சங்கம் “இதிகிரீம் மெதுர”, 350ஏ, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.	உறுப்பினர்	2016.10.27
13	பொறி. எச்.பி.ஆர். குணவர்தன இலங்கை பொறியியலாளர் ஆலோசனை சங்கம், 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.	உறுப்பினர்	2015.11.20
14	பொறி. கே.பி.ஐ.யூ. தர்மபால இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் 120/15 விஜேராம மாவத்தை, கொழும்பு 07.	உறுப்பினர்	2015.11.20

நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை (CIDA) தனது பணியினை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ) கைத்தொழில் சேவைகள் பிரிவு
ஆ) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு
இ) மின் எந்திரவியல் சேவைகள் பிரிவு
ஈ) கைத்தொழில் பயிற்சிப் பிரிவு


சட்டத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கி உரிய கால எல்லைக்குள் அவற்றை செயற்படுத்த கூட்டிணைக்கப்பட்ட திட்டம் தயார் செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்துடன் 2016 - 2021 ஆம் ஆண்டு வரைக்கான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

தவிசாளரின் பொதுவான உத்தரவுக்கு உட்பட்ட வகையில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தினது ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவர். நிருவாக விடயங்கள் நிர்வாக விடங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் நிதிசார் அலுவல்கள் நிதி விடயங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் செயற்பாட்டுப் பிரிவுகளாக இயங்குகின்றன. (பிரிவுகளின் செயற்பாடுகளைக் காட்டும் அட்டவணையைத் தயவு செய்து பார்க்கவும்).

கால இலக்குகள் வகுக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகள் பற்றியும் அவை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் பற்றியும் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் விவரமாக தரப்பட்டுள்ளன.

6.0 பிரிவுகளின் செயற்பாடுகள்

நிறுவனக் கட்டமைப்பு
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)



CIDA பணியாளர்களின் எண்ணிக்கை - 31.12.2016				
சம்பள குறியீடு	பணியாளர் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்	இருக்கும் ஆளணியினர்	காலியிடங்கள்
	தவிசாளர்	1	1	0
	உதவித் தவிசாளர் தொழிற்பாட்டு பணிப்பாளர /	1	1	0
	சேகரிப்பு	**2**	**2**	**0**
	சிரேஷ்ட தரம்			
HM 2-1	பணிப்பாளர் நாயகம்	1	1	0
HM 1-3	பணிப்பாளர்	6	3	3
MM 1-1	உதவிப் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர /	28	15	13
	சேகரிப்பு	**35**	**19**	**16**
	மூன்றாம் தரம்			
JM 1-2	கனிஷ்ட மேலாளர்	40	23	17
	சேகரிப்பு	**40**	**23**	**17**
	இரண்டாம் தரம்			
M A 1-2	முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்) (அற்ற	80	71	9
M A 2-2	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)	24	16	8
	சேகரிப்பு	**104**	**87**	**17**
	முதலாம் தரம்			
PL-3	தேர்ச்சிபெற்ற	86	60	26
PL-2	அரை தேர்ச்சிபெற்ற	9	4	5
PL-1	தேர்ச்சியற்ற	44	34	10
	சேகரிப்பு	**139**	**98**	**41**
	பாதுகாப்பு			
M A 1-2	பாதுகாப்பு அதிகாரி மேற்பார்வையாளர் /	9	6	3
PL-1	பாதுகாவலர்	33	16	17
	சேகரிப்பு	**42**	**22**	**20**
		360	**249**	**111**

6.1 கைத்தொழிற்துறை சேவைகள் பிரிவு

கைத்தொழிற்துறை சேவைகள் பிரிவின் மூலம் ஒப்பந்த முகாமைத்துவம், நிர்வாகம், ஆலோசனை,திட்ட முகாமைத்துவ சேவைகள், தகைமையுள்ள நபர்களை பதிவு செய்தல், தொழில்நுட்ப கணக்காய்வு,ஒப்பந்தப் பிணக்குகளுக்கான தீர்வுகள் தொடர்பான ஆலோசனை சேவைகள் மற்றும் நிர்மாணத்துறைக் கைத்தொழிலின் அபிவிருத்திற்கு துணை நிற்கும் இதர சேவைகளை வழங்குவதற்கான தேவைகளை அடையாளங்காணுவதுடன் அவற்றை முறைமைப்படுத்துகின்றது.

கைத்தொழில் சேவைகள் பிரிவு, 2016 ஆண்டில் அதன் பங்குதாரர்களான பின்வரும் தொழிற்துறையினருக்கு அதன் சேவைகளை வழங்கியது. (அதாவது ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள்,போன்ற)

1. அறிவுரைகள்,ஆலோசனை சேவைகள், பிணக்குத் தீர்மானம் மற்றும் ஒப்பந்த விடயத்தில் மத்தியஸ்தம்வகிக்கும் தீர்ப்பாளர்களை நியமித்தல்.
2. கருத்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்குதல்.
3. நிர்மாணப் புள்ளிவிபரங்களின் CIDA விவரத்திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்.
4. CIDAவழிகாட்டல் கோவைகள் மற்றும் வகையீடுகளை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்
5. தரமான விலைமனு ஆவணங்களை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்.
6. நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்துதல்.
7. தொழில்நுட்ப கணக்காய்வு நடைமுறையை நிறுவுதல் மற்றும் தரமான முகாமைத்துவ கணக்காய்வாளர்களுக்கு தேவையான தகைமைகளை தயாரித்தல். (நிறைவடையவில்லை)
8. தகைமையுள்ள ஆட்களைப் பதிவு செய்தல்.
9. ‘‘இனம் காணப்பட்ட நிர்மாணப் பணிகளை’’ பதிவு செய்தல்.
10. மத்தியஸ்தரகளுக்கான நடைமுறை விதிகளை தயாரித்தல் (தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது)
11. சூழல் மற்றும் பொது மக்கள் சுகாதாரம் தொடர்பான விதிகள் மற்றும் கட்டளைகளை தயாரித்தல் (தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது)
12. ஒழுக்க மற்றும் சமூகப் பெறுமானங்கள் தொடர்பான விதிகள் மற்றும் கட்டளைகளை தயாரித்தல் (தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது)

6.1.1. ஆலோசனை சேவைகள், பிணக்குத் தீர்மானம் மற்றும் நிர்மாணஒப்பந்த விடயங்களில் மத்தியஸ்தம் வகித்தல் மற்றும் தீர்ப்பாளர்களை நியமித்தல்

கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறு மீதான தீர்மானம்,CIDA சூத்திரமுறை,CIDA நியம கூறுவிலை ஆவணங்களின் விவரக்கூற்றுக்கள் ஆகியவை தொடர்பான அறிவுரைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது. இந்த இலவச சேவைகள் பிரிவுக்கு 2016 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் எனப் பலரும் கோரிக்கைகளை முன்வைத்தனர். சம்பந்தப்பட்ட தரப்பினரால் கோரப்பட்ட விடயங்களுக்கு 4200 க்கும் மேற்பட்ட ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு 19 தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தீர்பாளர்களின் பெயர் பட்டியல் CIDA இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களுக்கு இடையில் மத்தியஸ்த சேவைகள் வழங்கப்பட்டன.

- கட்டிடத் திணைக்களம் எதிர் லாப் இன்ஜினியரிங்
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எதிர் சுமனசேகர கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட்
- பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) – மேல் மாகாண சபை எதிர் கலிக்ஸ் பில்டர்ஸ்

6.1.2 கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்

அரசாங்க நிறுவனங்கள் அவர்களது கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை இந்தப் பிரிவிடம் கோரினர். அதற்கமைய கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்தல்,கூறுவிலைகளை மதிப்பீடு செய்தல், ஒப்பந்த நிருவாகம், உள்ளக கொடுப்பனவு சான்றிதழ்களை தயாரித்தல் போன்ற விடயங்களுக்கான அறிவுரைகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டன.

கருத்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்கப்பட்ட பிரதான நிறுவனங்களின் பட்டியல் பின்வருமாறு

- காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களம்
- ஆயுர்வேத வைத்தியசாலை கைத்தடி
- அரசாங்க அச்சகத் திணைக்களம்
- இலங்கை சுற்றுலாத்துறை
- அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- இலங்கை கைவிணைச் சபை – லக்சல பம்பலப்பிட்டி
- ஆய்வுப் பூங்கா – மொலடி ஹவுஸ்
- ஹேவகே கன்ஸ்ட்ரக்ஷன் என்ட் நெஷனல்

6.1.3. நிர்மாணப் புள்ளிவிபரங்களின் CIDA விவரத்திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல்

இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், சரீர உழைப்பு வேதனங்கள், பொறிகளின் கேள்வுக் கட்டணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. இந்த விபரத் திரட்டுக்கள் முக்கியமாக ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கானசுட்டிகளாகப் பயன்படுத்துகின்றன.நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கு சுமார் 1460 எண்ணிக்கையிலான விவரத்திரட்டுகள் குறிப்பிட்ட வருடத்தில் விற்பனை செய்யப்பட்டன.

6.1.4. CIDA வழிகாட்டல் கோவைகள் மற்றும் வகையீடுகளை வெளியிடுதல்

2016 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட ஆவணங்கள்

- ICTAD/DEV/16 - கொண்கிரீட் தட்டுக்ககளை உறுதியாக வார்ப்பதற்கான விவர வரையறை
- ICTAD/DEV/17 - சிவில் பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பான தளப் பரிசோதனைக்கான விவர வரையறை
- சிவில் பொறியியல் அளவீட்டு முறைகளின் தரம் - CESMMSL
- SCA/3/1 – நீர்பாசன மற்றும் கழிவு நீர் வேலைகளுக்கான விவர வரையறை

2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆவணங்கள்

- ICTAD/DEV/16 - கொண்கிரீட் தட்டுக்ககளை உறுதியாக வார்ப்பதற்கான விவர வரையறை

6.1.5. தரப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்.

பின்வரும் தரப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்கள் திருத்தம் செய்யப்படுகின்றன.

- SBD பாரிய ஒப்பந்தங்கள்
- SBD சிறிற மற்றும் நடுத்தர ஒப்பந்தங்கள்
- SBD வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தங்கள்

CIDA ஆவணங்களில் கட்டாயமாக பயன்படுத்த வேண்டிய விதிமுறைகள் பற்றிய நகல் வரைவு 2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சட்ட வரைஞரின் அவதானிப்புரைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6.1.6.கருத்தரங்குகளை நடத்துதல்

நிர்மாணச் சமூகங்களிடையே அரிவு விருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டி பின்வரும் கருப்பொருள்களில் 04 கருத்தரங்குகளை இப்பிரிவு நடாத்தியது.

i. நிர்மாண ஒப்பந்த அறவீடுகள் மற்றும் பிணக்குத் தீர்மானங்கள்
ii.கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்
iii. நிர்மாணக் கைத்தொழிலிலுள்ள விதிமுறைகள் மற்றும் அங்கீகாரங்கள்
iv. விலை தளம்பல் சூத்திரம் மற்றும் ஒப்பந்த அறவீடுகள்

6.1.7. தொழில்நுட்ப கணக்காய்வு

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தொழில்நுட்ப கணக்காய்வை மேற்கொள்ளும் நோக்கில் தர முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் பட்டியலொன்று அதிகார சபையினால் பேணப்படும். தொழில்நுட்ப கணக்காய்வு தொடர்பான விதிமுறைகள் மற்றும் கட்டளைகள் பற்றிய வரைவு ஒரு குழுவினால் தயாரிக்கப்பட்டு CIDA பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

6.1.8. தகுதிவாய்ந்தவர்களை பதிவுசெய்தல்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தகுதிவாய்ந்தவர்களின் பட்டியலொன்று அதிகார சபையினால் பேணப்படும். தகுதிவாய்ந்தவர்களை பதிவதற்கானவிதிமுறைகள் மற்றும் கட்டளைகள் பற்றிய வரைவு ஒரு குழுவினால் தயாரிக்கப்பட்டுCIDA பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

6.1.9. "இனம்காணப்பட்ட நிர்மாணப் பணிகளைப்" பதிவுசெய்தல்

விதிமுறைகள் பற்றிய நகல் வரைவு 2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சட்ட வரைஞரின் அவதானிப்புரைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **மத்தியஸ்தரகளுக்கான நடைமுறை விதிகளை தயாரித்தல்**

2016 ஆம் ஆண்டில் அவர்களுக்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- **சூழல் மற்றும் பொது மக்கள் சுகாதாரம் தொடர்பான விதிகளை தயாரித்த**ல்

2016 ஆம் ஆண்டில் அவர்களுக்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- **ஒழுக்க மற்றும் சமூகப் பெறுமானங்கள் தொடர்பான விதிகளைத் தயாரித்தல்**

2016 ஆம் ஆண்டில் அவர்களுக்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- **மத்தியஸ்தம் வகித்தல் பற்றிய டிப்ளோமா பாடநெறி**

2016 ஆம் ஆண்டு மத்தியஸ்தம் வகித்தல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி வெற்றிகரமாக நடைப்பெற்றது அதன் பரீட்சை 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைப்பெற்றது.

6.2. அபிவிருத்திப் பிரிவு

6.2.1.நிருமாண ஒப்பந்தக்காரர்களுக்கு தேசிய பதிவுமற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதாவது குறிப்பான ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான அவர்களது பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேசமான ஒப்பந்தக்காரர்களின் ஆற்றலளவுகளுக்கான ஒரு திரையிடும் நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில் நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் 2476 எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டன,413 ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டனர். 591 ஒப்பந்தக்காரர்களது பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் (கட்டிட மற்றும் சிவில்), விசேட (மின் - பொறிமுறை), விசேட (முடிவுறுத்தல் மற்றும் வேறு விசேட வேலை) பதிவுக்கான வழிகாட்டல்கள் திருத்தம் செய்யப்பட்டு இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அது நிர்மாணக் கைத்தொழிலின் நலனுக்காக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிடப்படவுள்ளது.

ஒப்பந்தக்காரர்கள்(Online)தெடரறா முறையில் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலும் கண்காணிப்பு முறையும் (CCPMS) மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறையும்(NCIIS)

I. இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலும் கண்காணிப்பு முறையும் (CCPMS)
இத்திட்டம் திறைசேரியின் நிதி வழங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிர்மாண துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இம்முறையினூடாக கண்காணிக்கப்படுவர்.

2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து C1 தரம் ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு C2 ,C3 தர ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை 2015 பெப்ருவரி மாதத்திலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இணையத்தள கண்காணிப்பு முறையானது பயனுகரி நட்புமிகு வசதிகளைக் கொண்டுள்ளது.

***II.* தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை(NCIIS)**
இலங்கை நிர்மணிப்புத் துறையின் செயற்பாடுகளின் வளர்ச்சியை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தேசிய நிர்மாண கைத்தொழில் தகவல் கட்டமைப்பு எனும் வெப் போர்டல் பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்ததாரர்கள் பதிவு, ஒப்பந்த கைத்தொழில் ஒழுங்கு விதிகள் போன்றனவும் மற்றும் எந்தவொரு நபரும் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்த கைத்தொழிலுடன் தொடர்புற்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி பற்றிய தகவல்கள் வெப் போர்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் சர்வதேச மட்டத்திலான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பகமான ஒரு மூலமாகவும் இது காணப்படுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலுக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகளின் தளம்பல்கள், அரச ஒழுங்கு விதிகள், நியமங்கள் மற்றும் சட்டவாக்கம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் செயலாற்றுகை போன்ற விடயங்களுக்கு ஏற்புடையவாறு இது அடிக்கடி விருத்தி செய்யப்படுகின்றது.

வெப் போர்டலின் அதிகமான அபிவிருத்திப் பணிகள் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தகவல் திரட்டும் பொறிமுறை 2016 ஆம் ஆண்டு விருத்தி செய்யப்பட்டது. அத்தோடு அது வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உலகலாவிய மட்டத்திலுள்ள நிர்மாணிப்பாளர்களுக்கு தேசிய சேவையாகவும் இலங்கையின் நிர்மாணிப்புத் துறையை மேலும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியளிப்பதற்கும் பொருட்டுவெப் போர்டலையும் தரவு திரட்டலையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக முன்னளிக்கப்பட்டுள்ளது.

6.2.2. நிருமாணத் திறமைக்கான CIDA விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த விருது வழங்கும் திட்டமொன்று 1990 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் தொடராக 2016 ஆம் ஆண்டு 27 ஆவது முறையாகவும் அது நடாத்தப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயற்றிறன், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரம், உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம், புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம், பயிற்சியில் கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2016 ஆம் ஆண்டின் போது 45 வேலைத்தள தரிசிப்புக்களும் / குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆண்டின் இறுதியில் மூன்று முன்வைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை CIDA ஏற்பாடு செய்ததுடன் BMICH மாநாட்டு மண்டபத்தில் 2016 டிசம்பர் 19 ஆம் திகதி விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்டார்கள். தொழிற்துறை தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழிற் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்குவபர்களுக்கு இது தொடராக அங்கீகரிக்கப்பட்ட பொதுவான ஒரு நிகழ்வாகும்.

நிருமாணத்துறை சிறப்பு விருதுகள் மற்றும் திறமை விருதுகள் - 2016
வெற்றியாளர்கள் - கட்டிடக் கருத்திட்டங்கள்

விருதின் வகை	கருத்திட்டம் மற்றும் உரிமையாளர்	ஒப்பந்ததாரர்
சிறப்பு விருது	ஆட்களை பதிவு செய்யும் செயலகத்தின் வடிவமைப்பும் நிர்மாணிப்பும் - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பத்தரமுல்லை	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்
சிறப்பு விருது	சொகுசு குடியிருப்பு அடுக்குமாடிக் கட்டிடம் - 320 யூனியன் பிளேஸ், கொழும்பு 02.	சன்கேன் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட்
சிறப்பு விருது	கொழும்பு மாநகரிலுள்ள குடியிருப்புக்களை மீள் நிலைப்படுத்தல்	எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ
சிறப்பு விருது	ஐஸ்லேன்ட் பிஸ்னஸ் சென்டர் வடிவமைப்பும் நிர்மாணிப்பும், கொழும்பு 03	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்
சிறப்பு விருது	போத்தல் தயாரிக்கும் ஆலை கட்டிடத் தொகுதி, முனிதாஸ குமாரதுங்க மாவத்தை, சீதுவை	ஆர் என் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட்
சிறப்பு விருது	வர்த்தகக் கட்டிடம் - டயலொக் எக்சியாட்டா பீஎல்சீ, 475 ஏ யூனியன் பிளேஸ், கொழும்பு 02	துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட்
சிறப்பு விருது	அலுமினிய கதவுகள், யன்னல்கள், கதவு பொருத்தல் உபகரங்கள், நுழைவு நடைவழி, அறைக் கூரை போன்றவற்றைஆட்களை பதிவு செய்யும் செயலகத்தின் வழங்குதலும் பொருத்தலும் - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பத்தரமுல்லை	அஜக்ஸ் இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
திறமை விருது	அபார்ட்மன்ட் கட்டிடத்தொகுதி – த பெயார் வே கார்டன், 39 பெரோ மாவத்தை, ராஜகிரிய	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
திறமை விருது	அதிவேகப் பாதைகள் செயலகம் - பத்தரமுல்லை	நவலோக்க கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (பிறைவட்) லிமிடட்
திறமை விருது	ஆறு மாடி கூட்டுறவு மருத்துவமனைக் கட்டிடம் - காலி	சிறிபாலி கன்ஸ்ட்ரக்டர்ஸ் (பிறைவட்) லிமிடட்

திறமை விருது	மக்கள் வங்கி கிளை அலுவலகம் - ஹதரலியத்த	கெம்யோ (பிறைவட்) லிமிடட்

நிர்மாணத்துறை செயற்றிறன் விருது - 2016
சிவில் பொறியியல் கருத்திட்டங்களுக்கான விருதுகள் - செயற்றிறன் விருதுகள்
வகைI– பெறுமதி ரூபா 1000 மில்லியனுக்கு மேல்

தொ. இல	கருத்திட்டம்	ஒப்பந்தக்காரரின் பெயர்
1	போதாகம - ஹம்பேகமுவ – கல்தொட்ட வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும்(B 528) (0+000 முதல் 48+200 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/UVA/LBFP/2011/392	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
2	பங்கதெனிய–ஆண்டிகம–ஆணமடுவ வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும்(B 45) (0+000 முதல் 38+000 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/NWP/GOSL/2011/374A	எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ
3	குருணாகல் - நாரம்மல - மாதம்பை வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும் (40+870 முதல் 64+770 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/NWP/LBFP/2011/753B	நெம் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட்
4	உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் மூலம் தேசிய நெடுஞ்சாலைகளை கொன்கிரீட் பரத்துதல் வஸ்கடுவ - பண்டாரகம வீதி (B 458) (0+000 முதல் 12+070 கி.மீ. வரை) கிதெல்பிட்டிய - பண்டாரகம வீதி (B 216) (0+000 முதல் 11+780 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/WP/GOSL/2011/453	கேடீ ஈபர்ட் என்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட்
5	பன்னலை - குளியாப்பிட்டி வீதிப் புனரமைப்பு (B 356) (5.0 முதல் 16.28 கி.மீ. வரை) மற்றும் குளியாப்பிட்டி - ஹெட்டிபொல வீதி (B 243) (0.00 முதல் 15.69 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/NWP/GOSL/2011/753B	நெம் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட்
6	மாத்தறை - ஹக்மனை வீதி விரிவாக்கமும் மறுசீரமைப்பும்(0+000 முதல் 24+140 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/SP/GOSL/2012/10	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
7	அலுத்கம முதல் - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வரை வீதி புனரமைப்பும் மேம்படுத்தலும் (B 157) மேற்கு பிரிவு (42+600 முதல் 53+670 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/NHSP/ICB/ADB/CP-3	கேடீஏ வீரசிங்க எனட் கம்பனி (பிறைவட்) லிமிடட்
8	காலி - தெனியாய - மாதம்பை வீதிப் பிரிவு ரக்வானை முதல் மாதம்பை வரை வீதி புனரமைப்பும் மேம்படுத்தலும் (130+000 முதல் 143+930 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/MFAP/ICB/OPID - 1/01	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
9	குருணாகல் - நாரம்மல - மாதம்பை வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும் (22+260 முதல் 40+870 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/DW/NWP/LBFP/2011/753A	கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் என்ட் கன்ஸ்ட்ரக்டர்ஸ் (பிறைவட்) லிமிடட்
10	கலகெதர - ரம்புக்கன வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும் (0.0முதல் 18.50கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/RNIP/PRP2/PACKAGE - C/C7(iii)	எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ
11	கொழும்பு - கண்டி A001 வீதி பேலியகொட முதல் கிரிபத்கொடை வரையிலான பிரிவு வீதிப் புனரமைப்பும் மேம்படுத்தலும் (5+860 - 13+100 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/MEAP/ICB/SFD - 2/07	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
12	பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம். காலி வீதி மற்றும் ஆர்ஏ டிமெல் மாவத்தை வீதி புனரமைப்பு, லிபர்டி சுற்றுவட்டம் முதல் தர்மபால	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன்

	வீதி சந்தி வரை ஒப்பந்த பக்கேஜ் சீ, ஒப்பந்த இலக்கம் MCUDP/CMC/W/12(C)	கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்
13	பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம். காலி வீதி பம்பலப்பிட்டி சந்தி முதல் தெற்கு நகர எல்லை வரை ஒப்பந்த பக்கேஜ் பீ, ஒப்பந்த இலக்கம் MCUDP/CMC/W/12(B)	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்

வகை II– பெறுமதி ரூபா 500 - 1000 மில்லியனுக்கு இடைப்பட்டவை

தொ. இல	கருத்திட்டம்	ஒப்பந்தக்காரரின் பெயர்
1	வவுனியா - ஹொரவப் பொத்தானை A029வீதி புனரமைப்பும் மேம்படுத்தலும் (24+000 - 34+950 கி.மீ. வரை) ஒப்பந்த இலக்கம் RDA/NRCP (AF) /ICB/ADB/CP - 11	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்
2	பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம். காலி வீதி மற்றும் ஆர்ஏ டிமெல் மாவத்தை வீதி புனரமைப்பு, கலதாரி சுற்றுவட்டம் முதல் கொல்லுப்பிட்டி சந்தி வரை ஒப்பந்த பக்கேஜ் ஏ, ஒப்பந்த இலக்கம் MCUDP/CMC/W/12(A)	இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட்
3	பொல்துவ பாலத்தின் நிர்மாணிப்பும் வடிவமைப்பும் வழங்கலும் ஒப்பந்த இலக்கம் RDA/UKSBP2/PLDW/006	எக்சஸ் இன்ஜினியரிங்
4	கந்தானை நீர் சுத்திகரிப்பு ஆலை விரிவாக்கம் ஒப்பந்த இலக்கம் WSDP/KGWSP - P1S2/ICB - 01	எக்சஸ் இன்ஜினியரிங்

வகை III– பெறுமதி ரூபா 100 - 500 மில்லியனுக்கு இடைப்பட்டவை

தொ. இல	கருத்திட்டம்	ஒப்பந்தக்காரரின் பெயர்
1	ஈச்சலம்பற்று நீர் வழங்கல் திடடம் - உயரிய நீர் தாங்கி கோபுர நிர்மாணம்,அலுவலக கட்டிடம், விடுதிகள், களஞ்சியசாலை, வழங்கல் மற்றும் பிரதான நீர் வழங்கல் மற்றும் பிரதான விநியோக பரிமாற்ற நிலையங்களை அமைத்தல். ஒப்பந்த இலக்கம் P&D/SE/ADB/CARE/EP/2011/01	கேடீஏ வீரசிங்க எனட் கம்பனி (பிறைவட்) லிமிடட்
2	ADB கடன் திட்டத்தின் கீழ் வடக்கு பாதைகள் இணைப்பு கருத்திட்டம் - மேலதிக நிதி உதவி (மாகாண கூறு) ADB கடன் திட்ட இல 2890 (SF) 2891 (Sri) ஒப்பந்த இலக்கம் NRCP/NP/NCB/KL 02	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
3	ADB கடன் திட்டத்தின் கீழ் வடக்கு பாதைகள் இணைப்பு கருத்திட்டம் - மேலதிக நிதி உதவி (மாகாண கூறு) ADB கடன் திட்ட இல 2890 (SF) 2891 (Sri) ஒப்பந்த இலக்கம் NRCP/NP/NCB/MU 01	மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்
4	பொல்கஹவலை - கோகாலை A 019 வீதியில் இல 3/2பாலம் புனரமைப்பு (கரதான பாலம்) ஒப்பந்த இலக்கம் RDA/MFAP/ICB/OFID - 1/03	வீவீ கருணாரத்ன என்ட் கம்பனி
5	புதிய லக்ஷபான மின்வலு சுரங்க திருத்தப் பணிகள் ஒப்பந்த இலக்கம் DSWRPP-AF/WORKS/DC/151	எஸ்டேட் டிவலொப்மன்ட் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கோபரேஷன்

நிர்மாணத்துறையில் புத்தாக்க தொழில்நுட்பத்துக்கான விருதுகள் - 2016

தோ .இல	கருத்திட்டம்	ஒப்பந்தக்காரரின் பெயர்
1	கொண் ஓயாவுக்கு குறுக்கான நிர்மாணிப்பு பணிகள் ஒப்பந்த இலக்கம் ID/HO/DORP/01,02,03/2010	எஸ்டேட் டிவலொப்மன்ட் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கோபரேஷன்

6.2.3.வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்தல்

இலங்கை கட்டிட திணைக்களம் NCASLமற்றும் CIDAஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட பூர்வாங்க விசாரணைக் குழாமொன்று ஒப்பந்தாரர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்

விளக்கம்	2016 பிணக்குகள்
CIDA நிறுவனத்தின் தகவலுக்காக மாத்திரம்	18
ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விளக்கம் கோரலும் அவர்களினால் வழங்கப்பட்ட பதில்களும்	55
தீர்க்கப்பட்டவைகள்	21
விசாரணைகள் மேற்கொள்ளப்படுபவை	03
மொத்தம்	**97**

6.2.4.CIDAசஞ்சிகை – 2016

2016 ஆம் ஆண்டுக்கான CIDA சஞ்சிகை நிர்மாணத்துறைக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தில் 2016 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. நிர்மாண கைத்தொழிலின் தர விடயங்கள் தொடர்பான தகவலை பரப்புவதே சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும். நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயனுள்ள கட்டுரைகளையும் தகவலையும் சஞ்சிகை வழங்குகின்றது.

இது சஞ்சிகையின் 14 வது பதிப்பாகும். இந்த வருடத்திலும் பங்காளர்களினாலும் புத்திஜீவிகளினாலும் வழங்கப்பட்ட மிக உயர்ந்த ஆதரவும் அர்ப்பணிப்பும் காரணமாக ICTAD / CIDA வரலாற்றின் 7 ஆவது தடவையாகவும் சர்வதேச மத்தியஸ்த சஞ்சிகையொன்றாக அது திகழ்ந்தது.

6.2.5.CIDAவின்தகவல் தொழில்நுட்ப முறைமை

பின்வரும் மிக முக்கிய பகுதிகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு கணனி முறைமையும் இணைய தளமும் திருப்திகரமாகப் பராமரிக்கப்பட்டன.

1. CCPMS இல் பதிவுகளை மேற்கொள்ளாத ஒப்பந்ததார்களையும் பிணக்குகளுடன் தொடர்புள்ள ஒப்பந்ததாரர்களையும் இனம் காண்பதற்கான கண்காணிப்பு முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
2. மதிப்பீடு செய்யப்பட்ட கோவைகளின் முன்னேற்றத்தை அவதானிப்பதற்கும் தரவுகளைப் தொடர்ந்தேர்ச்சியாக பேணுவதற்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை விருத்தி செய்தல்.
3. பதிவுகளை துரிதமாக மேற்கொள்வதற்காக அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிகமுகப்படுத்தி பேணிவரல்.
4. OTC,CETRAC, CHPB ஆகிய நிறுவனங்களை CIDA வின் தலைமையக நிதிப் பிரிவோடு இணைக்கும் மத்திய தரவு சேர்வர் ஒன்றை அறிமுகம் செய்தல்.

5. ICTAD இன் அதிகாரங்களை CIDA வின் அதிகாரங்களாக மாற்றுதல் மற்றும் அதற்கமைய மின்னஞ்சல் முகவரிகளையும் மாற்றியமைத்தல்.
6. CIDA நிறுவனத்தின் இணையத்தை பயன்படுத்துவதன் காரணமாக ஒவ்வொரு மாத இறுதியிலும் ஏற்படும் தரவு எல்லை அதிகரிப்பை சமாளிப்பதற்கும் அதனை முகாமை செய்வதற்கும் பயர்வோல் ஒன்றை நிறுவுதல்.

6.2.6. 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களின் தகுதிகள் மற்றும் இயலளவுகளை விருத்தி செய்யும் நோக்கில் தொடர்ந்தேர்ச்சியாக இவ்வாண்டிலும் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

- ''முன் தகைவு கொன்கிரீட் மற்றும் நிர்மாண மதிப்பீடு'' தொடர்பான கருத்தரங்கு – 2016ஜனவரி22 ஆம் திகதி.
- ''நிர்மாண வேலைத்தளங்களில் பாதுகாப்பு'' பற்றிய கருத்தரங்கு – 2016பெப்ரவரி 19 ஆம் திகதி.
- ''வலுவூட்டப்பட்ட கொன்கிரீட் மற்றும் நிர்மானச் செலவு முகாமைத்துவம''பற்றிய கருத்தரங்கு – 2016ஏப்ரல் 01 ஆம் திகதி
- ''உயரமான கட்டிடங்களில் அலுமினியம் மட்டும் குழாய் பொருத்தல் வேலைகள்'' தொடர்பான கருத்தரங்கு 2016 ஒக்டோபர் 07 ஆம் திகதி
- ''நகர அபிவிருத்தி தொடர்பான கட்டிட வடிவமைப்பு விதிமுறைகள்'' பற்றி குறுகிய கால பாடநெறி - 2016 ஆகஸ்ட் 5,12 மற்றும் 19 ஆம் திகதி
- ''முன் தகைவு கொன்கிரீட் வடிவமைப்பு'' குறுகிய கால பாடநெறி - 2016 ஜூன் 3,10 மற்றும் 17 ஆம் திகதி
- ''நிர்மாணக் கைத்தொழில் ஆய்வு பற்றிய மூலை அரியணை (I)'' செயலமர்வு - 2016 ஜூன் 23 ஆம் திகதி
- ''நிர்மாணக் கைத்தொழில் ஆய்வு பற்றிய மூலை அரியணை (II)'' செயலமர்வு - 2016 ஜூலை 14 ஆம் திகதி
- ''நிர்மாணிப்பு மணல் தரவுத்தளம்'' பற்றிய நிகழ்ச்சி - 2016 ஜூலை 15 ஆம் திகதி
- ''எம் மணல்'' பற்றிய நிகழ்ச்சி - சீடீஈ (பிறைவட்) லிமிடட் - 2016 ஏப்ரல் 28 ஆம் திகதி

CBO நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாவட்ட செயலகம் - கண்டி - 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி
- மாவட்ட செயலகம் - கம்பஹா - 2016 பெப்ரவரி 26 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - அம்பகமுவ கோரலய - 2016 மார்ச் 11 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - கிரிபாவ - 2016 மார்ச் 24 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - களுத்துறை - 2016 ஏப்ரல் 08 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - நொச்சியாகம - 2016 ஏப்ரல் 25 ஆம் திகதி
- மாவட்ட செயலகம் - மாத்தறை - 2016 மே 10 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - மிஹிந்தலய - 2016 ஜூன் 03 ஆம் திகதி
- மாவட்ட செயலகம் - அம்பாறை - 2016 ஜூன் 24 ஆம் திகதி
- பிரதேச செயலகம் - தெஹிஅத்தகண்டிய - 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதி

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பை அதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை /செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளது


6.3 மின் எந்திரவியல் சேவைப் பிரிவு

நிர்மாண உற்பத்தித்திறனில் அளவிடக்கூடிய அதிகரிப்பொன்றைச் சாதிப்பதற்காக நிர்மாண கைத்தொழிலில் தகுதிவாய்ந்த நிருமாணச் செயற்பாடு ஒன்றை உருவாக்குவதற்காக நிருமாணச் சாதனங்களின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியன மீது தோச்சிகளையும் அறிவையும் பகிர்வதே மின் எந்திரவியல் சேவைப் பிரிவின் (EMS)நோக்காகும்.

மின் எந்திரவியல் சேவைப் (EMS)பிரிவின் நோக்கங்கள் வருமாறு:

1. நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் தமது தொழில்களை செயற்றிறனுடனும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை மேம்படுத்தல்.
2. நிர்மாண இயந்திர சாதன மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ ஆளணியினர் தமது தொழில்களைச் செயற்றிறமையாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை முன்னேற்றுதல்.
3. நிர்மாணத்துறையின் கிடைப்புத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் பழுதுபார்த்தல் ஆகுசெலவை குறைத்து நேரத்தைக் மீதப்படுத்தும் முகமாக நிர்மாண சாதனங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் பொருத்தமான தடுப்பு பராமரிப்பு செயல்முறைகளை விருத்திசெய்தலும் அமுல்படுத்தலும்.
4. நிர்மாணக் கைத்தொழிலினுள் பிரவேசிக்க உத்தேசிக்கும் நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் முறைமையான அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்.
5. நிர்மாணச் சாதன பயிற்சி நிலையத்தின் (CETRAC) மாதிரி வேலைத்தளத்தில் அவசியமான பயிற்சியை வழங்குவதன் மூலமும் நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும் கைத்தொழிலுக்கு உதவியளித்தல்.
6. இலங்கை நிர்மாணச் சாதன பொறிமுறையாளர்களினதும் இயக்குனர்களினதும் சீவியத் தாழிலின் சமூக அங்கீகரிப்பை மேம்படுத்தல்.

நிர்மாணசாதன இயக்குனர் பயிற்சி நிலையம்(CEOTC) மற்றும் நிர்மாணச் சாதன பயிற்சி நிலையம் (CETRAC) ஆகிய இரு அலகுகளை CIDAஇன் EMS பிரிவுகொண்டுள்ளது.



6.3.1 நிர்மாணசாதன இயக்குனர் பயிற்சி நிலையம்(CEOTC)

நோக்கு

" நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்."

செயற்பணி:

"நிர்மாணக் கைத்தொழிலின் திறமைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அறிவு, பராமரிப்பு மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவத்தினூடாக திறமையுள்ள தொழிற்படையொன்றை நிர்மாணத் துறையில் உருவாக்குதல் மற்றும் அதனூடாக நிர்மணத்துறையின் பயனுறுதியை அளவிட முடியுமான ஒன்றாக மாற்றுதல்"

நோக்கங்கள்:

- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய மட்ட திறமைகளுக்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்.
- இயந்திர உபகரணங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பான முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்.
- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் (NVQ) பரிசோதனைகளை நடாத்தல்.
- ஒப்பந்த இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்.



- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.
- அரசாங்க கருத்திடங்களில் ஒரு பகுதியைப் பெற்று புதிய இயக்குனர்களுக்கு அதிக அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

நகரி டிரக்டர்கள், சுமையேற்றிகள், தோண்டிகள், மோட்டார் தரப்படுத்திகள் போன்றவற்றின் பாதுகாப்பு, அடிப்படைப் பராமரிப்பு மற்றும் தொழிற்படுத்தல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடனான விசேட தொடர்புடன் நிர்மாண சாதனங்கள் மீதான பயிற்சியை இயந்திர சாதனப் பயிற்சி கல்லூரி வழங்குகின்றது. 56 தொகுதிகளைக் கொண்ட நிர்மாண இயந்திர சாதனங்களையும் போதிய எண்ணிக்கையிலான பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களையும் இயந்திர சாதனப் பயிற்சிக் கல்லூர கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான திறமைகளைப் பகிர்வதற்கான செயன்முறைப் பயிற்சிக்காக பயிற்சி நேரத்தின் சுமார் 70%ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீதி 30% பயிற்சி நேரம் பாடபோதனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான செயல்முறைப் பயிற்சி வழங்கப்படும் அதேவேளை வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்கத்திற்காக சில நிர்மாணச் சாதனங்கள் கேள்வுக்கு விடப்படுகின்றன.

இயக்குனர் பயிற்சி கல்லூரியினால் (OTC)நடாத்தப்படும் பயிற்சிகள் நிறுவன ரீதியான பயிற்சிகளையும் தொழில் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன. ஒரு பயிற்சியாளன் ஆகக் குறைந்தது மூன்று மாத தொழிற் பயிற்சியையும் நிறுவன ரீதியான பயிற்சியையும் பூர்த்தி செய்த பின்னர் அவர் NVQ தகைமையைப் பெறுகின்றார். இயக்குனர் பயிற்சி கல்லூரி (OTC) நிர்மாண இயந்திர சாதன இயக்குனர்களுக்கான தேசிய வர்த்தக பரிசோதனைகள் மற்றும் NVQ பரீட்சைகளையும் நடாத்துவதற்கு NAITA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி.(CEOTC)இல் நடத்தப்படுகின்றன:

1. பூர்வாங்கப் பயிற்சி

1.1 அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு

2. பயில்திறன் அபிவிருத்தி

2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
2.2 தொட்டி பாரவண்டி
2.3 பண்னை டிரக்டர்
2.4 தன்னியக்க அதிர்வு பாதை ரோலர்

3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்

3.1 நகரி டிரக்டர்
3.2 சக்கரத்திலான சுமையேற்றி
3.3 மோட்டார் கிரேடர்
3.4 நீரியல் தோண்டி
3.5 பின்வாரி ஏற்றி
3.6 சக்கரத் தடை பளுவேற்றி

4. சிறப்பு சாதனங்கள்

4.1 நடமாடும் கிரேன்
4.2 பொறி ஏற்றி இறக்கி
4.3 முள் வாரி ஏற்றி
4.4 கிரேன் பாரவண்டி

5. தொழில் தேர்வுகள்

5.1 தேசிய தொழில் தேர்வுகள்
5.2 NVQ தேர்வுகள்

6.கருத்தரங்குகள் /செயலமர்வுகள்

நிர்மாணக் கைத்தொழில் துறையின் கேள்விக்கு ஏற்ப OTC கல்லூரியினால் நிர்மாண சாதனங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திறன் தேர்வுகள் என்பன நடாத்தப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பயிற்சித் திட்டம் தொடர்பிலான சாதனைகளும் அட்டவணை5.3.5வழங்கப்பட்டுள்ளன.

	பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	**திட்டமிடப்பட்டவை**		**முன்னேற்றம்**	
		திட்டங்களின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.	திட்டங்களின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.
1.0	பூர்வாங்கப் பயிற்சி				
	1.1 நிருமாணச் சாதனங்களின் அடிப்படை பராமரிப்பு	26	710	20	504
2.0	பயில்திறன் அபிவிருத்தி				
	2.1 பாரமற்ற சாதனம்	5	5	--	--
	2.2 டிரக்டர்	5	5	3	3

	2.3 தன்னியக்க அதிர்வுரோலர்	6	15	3	12
	2.4 தொட்டி பாரவண்டி	5	5	--	--
3.0	மண் அகற்றும் சாதனங்கள் அடிப்படை மட்டிசைப்புகள்				
	3.1 நகரி ட்ரக்டர்	4	20	1	2
	3.2 சக்கரத்திலான சுமையேற்றி	6	30	1	2
	3.3 மோட்டார் தரப்படுத்தி	9	70	7	68
	3.4 நீரியல் தோண்டி	10	100	8	75
	3.5 பின்வாரி ஏற்றி	14	210	16	209
	3.6 சக்கரத் தடை பளுவேற்றி	5	10	1	5
4.0	நிபுணத்துவச் சாதனங்கள்				
	4.1 நடமாடும் கிரேன்	7	20	3	11
	4.2 பொறி கொண்டுசெல்லி	11	30	2	7
	4.3 முள்கரண்டி ஏற்றி இயக்கி	11	30	6	15
	4.4 கிரேன் பாரவண்டி	5	5	4	21
	மொத்தம்	**129**	**1265**	**75**	**934**

அத்தோடு, நிர்மாண சாதனங்கள் இயக்குநர் பயிற்சி வறுமை மற்றும் அபிவிருத்தி இலக்குகளை கடப்பதற்கு மிகவும் வெற்றிகரமான வழிமுறையாக உள்ளது. இலங்கை இளைஞர்களைப் பொறுத்த வரையில் இந்த தொழிற் துறையில் அவர்களது விரும்பம் மற்றும் கவனம் செலுத்தப்படவில்லை.

நிர்மாணத்துறை இயக்குநர்களின் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு OTC மூலம் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகையை பயிற்சிகளுக்கான நிதி வசதி ஒரு தடையாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ‘‘திவி நெகும’’ தொழிற் பயிற்சி நிதியத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டு 97 விண்ணப்பதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற இயக்குநர்களின் திறன்களை மேம்படுத்துவதில் வருடந்தோறும் 2014 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பெரு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுதல்

இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் மேலதிக சேவையொன்று இயக்குனர் பயிற்சிக் கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பயிற்சி நிலையத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுகின்றது. பயிற்சியை முன்னிலைப்படுத்தி கையிருப்பிலுள்ள இயந்திர சாதனங்களை கட்டுமானக் கைத்தொழிலுக்கான சேவை நோக்கத்தில் வாடகைக்கு விடப்படுகின்றன. பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் வாடகைக்கு இடப்படுவதில்லை மாற்றமாக வெறுமனே வைப்பிலுள்ள இயந்திர சாதனங்கள் மாத்திரமே வாடகைக்கு விடப்படுகின்றன.

இயந்திர சாதனங்கள் இயக்குநர் பயிற்சி – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

வேலையற்ற இளைஞர்களை தெரிவு செய்து வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தென் மாகாணத்தின் திறன் விருத்திக்காக நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தங்குமிட வசதி உணவு போக்குவரத்து என முற்றிலும் இலவசமாக நடாத்தப்பட்டன. அவர்களது தெரிவுக்கு அமைய 14 பயிற்சியாளர்களுக்கு நிர்மாண சாதங்கள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டின் இயக்குநர் பயிற்சிக் கல்லூரியினால் ஈட்டப்பட்ட வருமானம்

தொழில் வகுதி	வருமானம் (ரூபா)
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	16,241,000.00
இயந்திரங்கள் வாடகை	6,342,124.50
தொழில் தேர்வுகள்	3,000.00
இயக்குநர் அடையாள அட்டைகள்	273,250.00
விடுதி வாடகை	2,582.61
வாடகை	21,083.29
நானாவிதமானவை	120,780.00
மொத்தம்	**23,003,821.30**

6.3.2 நிருமாண இயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி அலகு

CIDA வின் நிர்மாண இயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது. கருத்திட்ட மற்றும் பராமரிப்பு முகாமையாளர்கள், இயந்திய பொறியியலாளர்கள், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட இயந்திரவியலாளர்கள், இயந்திர உதவியாளர்கள் மற்றும் பாடசாலை விலகியோர் ஆகியோருக்கான பயிற்சி நெறிகளும் CETRAC நிறுவனத்தில் நடத்தப்படுகின்ற





• CETRAC இன் பயிற்சித் திட்டங்கள்

1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRACஇன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. CIDA வினால் கட்டிட சேவை பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் CETRAC ஆரம்பித்துள்ளது.

1) நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில்முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

2) நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி நடத்தப்படுகிறது. இது மூன்று வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRACஇல் 09 மாதங்களைக் கொண்ட நிறுவனரீதியான பயிற்சியையும் தொழில் நிலையங்களில் 27 மாதங்களைக் கொண்ட செயல்முறைப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று 60 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

அவர்களுக்கான இலவச தங்குமிடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் வேறுபட்ட தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 பயிற்சியாளர்கள் CETRACஇல் நிறுவன ரீதியிலான பயிற்சியை மேற்கொள்வதுடன், அதன் மொத்தச் செலவினத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஆண்டு ஒன்றுக்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

3)ஊழியர்களின் பயில்திறனைத் தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்புமற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் முகாமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

4) கனிஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 2)

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில்வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி பல பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன் இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

5) சிரேஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 3)

சிரேஷ்ட பொறிமுறையாளர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.




6) மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்

நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

7) பொறியியலாளர்கள் /முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்

நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப்பயன்படுத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள மின் எந்திரவியல் பொறியியலாளர்களுக்கும்,முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.




8) களஞ்சிய /விநியோக /கருத்திட்ட பணியணியினருக்குமான பயிற்சித் திட்டங்கள்

வழமையாக நிர்மாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய/விநியோககருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்படுத்தல் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இவ்விரு பயிற்சித் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டன.

9) கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள பொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச்சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

10) வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈட்டப்பட்ட அனுபவத்துடன் நாட்டில் மாற்றமடைந்து வரும் கிராக்கியைப் பூர்த்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை இனம் கண்டு விருத்தி செய்ததினூடாக பயிற்சியில் பலதரப்பட்டதும், குறிப்பானதுமான கிராக்கிகளை CETRACஇனால் வெற்றிகரமாக ஈடுசெய்வதற்கு இயலுமாகியது.

2016 ஆம் ஆண்டு CETRAC இன் செயற்றிறன் பின்வருமாறு

அட்டவணை 1 : 2016 ஆம் ஆண்டு CETRAC இன் செயற்றிறன்

	பயிற்சி நெறிகள்	பதிவு செய்யப்பட்ட		வெளியேறிய	
